கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் ஊராட்சி ஒன்றியம்

கணியூர் ஊராட்சி மன்ற தலைவரின் நடவடிக்கைகள்

முன்னிலை: திரு.கா.வேலுச்சாமி

மனைப்பிரிவு அங்கீகார எண்.04/2024-25 நாள்: 04.09.2024

பொருள்: மனைப்பிரிவு அங்கீகாரம் - கோயம்புத்தூர் மாவட்டம் - சூலூர் ஊராட்சி ஒன்றியம் - கணியூர் ஊராட்சி - க.ச.எண். 513/2C2B2 & 513/2C2B4 -ல் 0.52 ஏக்கர் பரப்பளவில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கு அங்கீகாரம் வழங்கி உத்தரவு பிறப்பித்தல் - தொடர்பாக.

பார்வை: 1. ஊராட்சி மன்ற தீர்மான எண்.93/2024 நாள் 12.08.2024
2. கோயம்புத்தூர் நகர் ஊரமைப்பு இணை இயக்குநர் கோயம்புத்தூர் மண்டலம் அவர்களின் ROC No.CBELPA/7HUXDWW0/ 2024/2024/ TCP நாள் 25.07.2024

உத்தரவு:

கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் ஊராட்சி ஒன்றியம், கணியூர் ஊராட்சி க.ச.எண். 513/2C2B2 & 513/2C2B4 -ல் 0.52 ஏக்கர் பரப்பளவில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கு பார்வையில் காண் கோயம்புத்தூர் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், கோயம்புத்தூர் மண்டலம் அவர்களின் உத்தரவின்படி ம.வ./கோ.உ.தி.கு.எண். 405/2024 மற்றும் திட்ட அனுமதி எண். 473/2024 நாள் 25.07.2024 என எண்ணிடப்பட்டு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட தொழில்நுட்ப அனுமதியில் கண்டுள்ள நிபந்தனைகளின்படியும் கணியூர் ஊராட்சியின் கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு மனைப்பிரிவிற்கு அங்கீகாரம் வழங்கி இதன்மூலம் உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

நிபந்தனைகள்:

1. குடிநீர் வசதி ஏற்படுத்த வேண்டும்.

2. தெருவிளக்கு வசதி ஏற்படுத்த வேண்டும்.

3. வடிகால் வசதி ஏற்படுத்த வேண்டும்.

4. கோயம்புத்தூர் மாவட்ட நகர் ஊரமைப்பு திட்ட அனுமதி மற்றும் தொழில்நுட்ப ஒப்புதலைக் கொண்டே ஊராட்சியின் இறுதி ஒப்புதல் வழங்கப்படுகிறது.

5. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என்று அறியப்பட்டாலோ அல்லது மனைப்பிரிவுக்கு மனைப்பிரிவு அங்கீகாரம் (இறுதி ஒப்புதல்) வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட மனைப்பிரிவு அங்கீகாரம் (இறுதி ஒப்புதல்) எவ்வித முன்னறிவிப்பும் இன்றி ஊராட்சியால் ரத்து செய்யப்படும்.

6. இம்மனைப்பிரிவு தொடர்பாக வழக்குகள் ஏதும் இருப்பின் அதற்கு இம்மனைபிரிவு உரிமையாளரே முழு பொறுப்பாவார்கள். அவ்வழக்கிற்கான வழக்கு கட்டணம், இழப்பீடுகள் அனைத்தும் மனைப்பிரிவு உரிமையாளரை சார்ந்தது.

தலைவர்,
கணியூர் ஊராட்சி

இணைப்பு:

1. உள்ளூர் திட்டக்குழும உத்தரவு மற்றும் நிபந்தனைகள்
2. மனைப்பிரிவு வரைபடம்

பெறுநர்

திரு.P.சந்திரசேகரன்
சைட் எண்.10 சுபதர்ஷன் நகர்
வீரியம்பாளையம் ரோடு, காளப்பட்டி,
கோவை 641 014

நகல்:

1. இணை இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
காந்திமாநகர், கணபதி
கோயம்புத்தூர் 641 004

2.சார்பதிவாளர், சார்பதிவகம், சூலூர்.